இன்றைய நாகரிகத்தின்
நவீன முன்னோடிகள்
✲ ராக மாலிகா ✲
ஆடை அகம்
3, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.


# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 01 வியாழக்கிழமை (16 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 20


சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
✲ ராக மாலிகா ✲
ஆடை அகம்
3, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# இ.தொ.கா.- அரசாங்க உறவு நிலை
# முறிந்து போகும் வாய்ப்பு அதிகம்!

## தொண்டமானே சொல்கிறார்

கொழும்பு, டிசம்பர் 16

இருபது வருடங்களுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொண்டுள்ள உறவு முறிந்து போகும் சாத்தியம் அதிகம் உண்டு.

இதனை அமைச்சர் தொண்டமானே வெரித்தாஸ் சிங்களச் சேவைக்கு அளித்த செவ்வி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான உறவுகள் உடைந்து போகாமல் கருத்து வேற்றுமைகளைக் களையும் பொருட்டு தமக்கும், பிரதமர் தலைமையிலான சிரேஷ்ட அமைச்சர்கள் குழுவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் திருப்திகரமான முன்னேற்றம் எதுவும் இதுவரை காணப்படவில்லை என்றும் அமைச்சர் தொண்டமான் கூறினார்.

அமைச்சர் தொண்டமான் தமது செவ்வியில் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அரசியற் பிரச்சினைகள் குறித்து மட்டுமே ஐ.தே.கவுடன் நாம் பேச்சு நடத்தி வருகிறோம் தொழிற் சங்கப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள் இரண்டும் வெவ்வேறு வகையானவை.

ஐ.தே.கவுடன் எமக்குள்ள நீண்டகால உறவை சீர் செய்து கொள்வதற்காக, நாம் பிரதமர் ரணில் தலைமையிலான அக்கட்சியின் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம். எனினும் அவற்றில் பெரிதாக முன்னேற்றம் எதுவும் இதுவரை காணப்படவில்லை.

இப்பேச்சுவார்த்தைகள் அனைத்தும் ஐ. ஐ. தே. மு. தலைவர் காமினி திஸநாயக்காவுக்கு மத்திய மாகாண சபை சம்பந்தமாக அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதியின் அடிப்படையிலேயே நடைபெற்று வருகின்றன — என்றார் அவர்.

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியதையும் அமைச்சர் தொண்டமான் ஒப்புக் கொண்டார்.

எமது மக்களின் நன்மைக்காக நான் எவருடனும் பேசுவேன். அந்தச் சுதந்திரத்தை எவரும் பறிக்க இடம்கொடு

(4 ஆம் பக்கம் பார்க்க)



டி. பியாரை ஒரு கலக்குக் கலக்குறது எண்டு உவர் மலை நாட்டு மன்னர் முடிவெடுத்திட்டார் போலை...!

### இன்று மழை?

கொழும்பு, டிச. 16

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய, ஊவா மாகாணங்களில் இன்று பல இடங்களிலும் மழை பெய்யக்கூடும் என கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை அறிவித்தது. (ஒ-162)

## மூன்று கப்பல்களிலிருந்து நேற்று பொருள்கள் இறக்கம்

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று மூன்று கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டன.

''வாதுவ'' விலிருந்து மாவும், 'மார்கோ'விலிருந்து மண்எண்ணெய் பரல்களும், 'ருகுணு' விலிருந்து தனியாருக்குரிய பொருள்களும் இறக்கப்பட்டன.

இதேவேளை 'வாதுவ' கப்பலிலிருந்து இறக்கப்பட வேண்டிய மா நேற்றுடன் இறக்கி முடிக்கப்பட்டது.

தொடர்ந்து இன்று முதல் 'வாதுவ' கப்பல் காங்கேசன்துறையில் பொருள்கள் இறக்கும். (ஒ-173)

## 5 ஆம் ஆண்டு புலமை பரிசில் முடிவு நாளை வெளிவரும்?

யாழ்ப்பாணம், டிச. 16

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை யாழ்ப்பாணத்தில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இப்பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியாகியிருந்தன.

விமான மூலம் நாளை இங்கு வரவிருக்கும் யாழ். அரச அதிபர் இப்பரீட்சை முடிவுகளை எடுத்து வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பரீட்சையில் தமிழ் மொழிமூலம் ஏழாயிரத்து 500 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## இலக்கத் தகடு இல்லாவிடில் நடவடிக்கை எடுக்கப்படும்

### வாகன உரிமையாளருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிச. 16

தமிழீழ அடையாள இலக்கத்தகடு, வரி அட்டை ஆகியன இல்லாமல் மோட்டார் வாகனங்களை வீதியில் பாவிப்போர் மீது தமிழீழ காவல்துறையினர் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர். எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வருவதாக தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ பிரதேசத்தில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் அனைவரும் தமது ஊர்திகளை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் கடந்த சித்திரை 21 ந் திகதி தொடக்கம் ஐப்பசி 30 ந் திகதிக்குட்பட்ட காலப்பகுதிக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

ஆகவே சகல மோட்டார் ஊர்திகளும் தமிழீழ அடையாள இலக்கத்தகடு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீதியில் பாவிக்கப்படுவதாயின் 1993 ஆம் ஆண்டுக்குரிய வரி அட்டையினை பெற்றிருத்தல்வேண்டும். எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் இலக்கத்தகடு, வரி அட்டையின்றி ஊர்திகளை வீதியில் பாவிப்பவர்கள் மீது தமிழீழ காவல்துறையினர் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர் என அறியத்தருகின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## ஆசிரியர் வெற்றிடங்கள்; விவரம் கொழும்புக்கு

### விரைவில் புதிய நியமனங்கள்

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரிய வெற்றிட விவரங்கள் கல்விச் சேவைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்படுள்ளதாக யாழ். கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விவரங்களை அனுப்புமாறு கல்விச் சேவை ஆணைக்குழு யாழ். கல்வி அலுவலகத்தைக் கடந்த மாதம் கோரியிருந்தது.

கடந்த வருடம் நடைபெற்ற ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலே கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

இப்பட்டியலை கல்விச் சேவை ஆணைக்குழு ஆராய்ந்தபின் விரைவில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## வடக்கு கல்வி வலயம் கோப்பாயில் இயங்கும்

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ். வடக்கு கல்வி வலய அலுவலகம் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் செயற்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். கல்வி மாவட்டம் வடக்கு, தெற்கு என இரு வலயங்களாக பிரிக்கப்பட்ட போதும், தற்சமயம் இரு வலய அலுவலகங்களும் யாழ். கல்வி அலுவலக கட்டடத்திலேயே செயற்பட்டு வருகின்றன.

அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ். வடக்கு வலயத்தின் அலுவலகம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் செயற்படும் எனவும்—

யாழ். தெற்கு வலய அலுவலகம் தற்சமயம் கல்வி அலுவலகம் செயற்படும் கட்டடத்திலேயே இயங்கும் எனவும்—தெரிய வந்தது.

இந்த அலுவலகங்களுக்கான அதிகாரிகள், எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## ஐரோப்பிய தூதுக்குழுவினர் டி.பியுடன் பேச்சுவார்த்தை

### வடக்கு - கிழக்கு நிலைமை குறித்தும் ஆராய்வு

கொழும்பு, டிச. 16

ஐரோப்பிய சங்கத்தைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி விஜேதுங்கவைச் சந்தித்து வடக்கு - கிழக்கு நிலைவரம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தது.

இத்தூதுக்குழுவில் 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

மனித உரிமை, வடக்கு — கிழக்குப் பகுதிகளில் உள்ள நிலைமை, வர்த்தகம் பொருளாதார ஒத்துழைப்பு போன்ற விஷயங்கள் அச்சந்திப்பின் போது ஆராயப்பட்டன.

இலங்கையுடன் ஐரோப்பிய சங்கத்துடனான தொடர்புகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்காகவே தூதுக்குழுவினர் இம்மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் தற்போது உள்ள நிலைவரம் பற்றியும் குழுவினர் ஆராய்ந்தனர்.

பிரிட்டன், டென்மார்க், பெல்ஜியம், ஸ்பெயின், கிரேக்கம், இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து, போர்த்துக்கல், ஜேர்மனி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இத்தூதுக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீவையும் தூதுக்குழுவினர் கடந்த திங்கட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ✲ யாழ். மாவட்டத்தில் 85க்கு பின் அதிக மழை; இதுவரை 1125.3 மி.மீற்றர்

யாழ்ப்பாணம், டிச. 16

ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களை உள்ளடக்கிய மாரிப் பருவகாலத்தில் 1985 ஆம் ஆண்டிற்குப் பின் இவ்வருடமே அதிகளவு மழை பெய்துள்ளது.

மூன்று மாரிகாலப் பகுதியில் 1986 ஆம் ஆண்டு 881.3 மில்லிமீற்றரும், 1988 ஆம் ஆண்டு 568 3 மி.மீற்றரும், 1989 ஆம் ஆண்டு 630.7 மி.மீற்றரும், 1990 ஆம் ஆண்டு 1041 2 மி.மீற்றரும், 1991 ஆம் ஆண்டு 539 4 மி.மீற்றரும், 1992 ஆம் ஆண்டு 278 2 மி.மீற்றருமாக மழை பெய்தது.

ஆனால் இந்த வருடத்தில் கடந்த இரண்டரை மாதங்களில் (இதுவரை) 1125 3 மி.மீற்றர் மழை பெய்துள்ளது.

1985 ஆம் ஆண்டில் மூன்று மாதங்களிலும் மொத்தம் 1190.4 மி.மீற்றர் மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலைய வானிலை ஆராய்ச்சி பகுதியில் இருந்து இப்புள்ளி விபரங்கள் பெறப்பட்டன. (ஒ-162)

### இன்று முதல் படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 16

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று வியாழக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று இதற்கான துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## ராணுவத்தினரை சுட்டுவிட்டு இருவர் தப்பி ஓட்டம்

### திருமலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 16

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர், இராணுவத்தினரைச் சுட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் மற்றவர் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 6 கோடி தமிழக மக்கள் புலிகளுக்கு ஆதரவு

### அமெரிக்கப் பத்திரிகை தகவல்

யாழ்ப்பாணம், டிச. 16

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு 6 கோடி தமிழக மக்கள் ஆதரவாக உள்ளனர் என அமெரிக்காவில் இருந்து வெளிவரும் ''ஹரால்ட் ரிபியூன்'' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஸ்ரீலங்காவில் சுதந்திர தேசம் ஒன்றை அமைப்பதற்காக போராடி வருகிறது. அதற்கு அயலில் தமிழ் நாடு உள்ளது. அங்குள்ள ஆறு கோடிக்கும் அதிகமான தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர் என்றும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## அனுரா அமைச்சராகிறார்

கொழும்பு, டிச. 16

அனுரா பண்டாரநாயக்கா உயர்கல்வி அமைச்சராக நாளை பதவியேற்பார் என்று 'ஒப்சேவர்' செய்தி வெளியிட்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

பொறுப்பு வாய்ந்த அமைச்சர் பதவி ஒன்று அவருக்கு வழங்கப்படுவதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது. (ஒ-3)

## இந்தியப்படை கைது செய்த 200 பேரைக்காணவில்லை

### சர்வதேச மன்னிப்புச் சபை தகவல்

லண்டன், டிச. 16

இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் சுமார் இருநூறு பேர் காணாமற் போய்விட்டார்கள்

இவ்வாறு லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நூற்றுக்கு அதிகமானோரும் பஞ்சாப் மாநிலத்தில் சுமார் 80 பேரும் காணாமற் போய்விட்டனர் என்றும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வட அயர்லாந்தில் அமைதி நிலைவரும்?

### இரு தரப்பு உடன்பாடு கைச்சாத்து

லண்டன், டிச 16

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரும், அயர்லாந்து குடியரசின் பிரதமரும் நேற்று வரலாற்று சிறப்பு மிக்க உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

வட அயர்லாந்தில் வன்முறைக்கு முடிவுகட்டி, நிலையான அமைதி ஏற்பட தாம் ஒப்புக் கொண்ட ஆதார கொள்கைகளை விளக்கி இப்பிரகடனத்தை இருவரும் கூட்டாக வெளியிட்டுள்ளனர்.

பலமாதங்களாக நடந்த பேச்சுவார்த்தைகளின் விளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் மலேரியா அதிவேகமாகப் பரவுகின்றது

### 2 வாரங்களில் இரண்டாயிரம் பேர் பாதிப்பு!

தென்மராட்சி, டிச 16

தென்மராட்சிப் பகுதியில் மலேரியாக் காய்ச்சல் வெகு வேகமாகப் பரவி வருகிறது.

இங்குள்ள ஆஸ்பத்திரிகளில் இருந்து பெறப்பட்ட பூர்வாங்க புள்ளி விவரங்களின் படி, கடந்த இரண்டு வாரங்களில் மட்டும், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நவம்பர் மாதத்தில் பெய்த கடும்மழை காரணமாக வெள்ளம் உண்டாகி அது தேங்கியதால் நுளம்பு பெருமளவில் பெருகி உள்ளதும் —

நுளம்புத் தொல்லையைத் தடுப்பதில் பிரதான பங்கு வகிக்கும் மலத்தியோன் யாழ்ப்பாணத்துக்கு உரிய காலத்தில் போதியளவில் எடுத்து வரப்படாமையுமே — காரணம் என்று வைத்தியசாலை வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் கடந்த இரண்டு வாரங்களி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யார் பொறுப்பு?

## வெள்ளம் வந்து நுளம்பு பெருகியும் மலத்தியன் இன்னும் வரவில்லை!

யாழ்ப்பாணம், டிச 16

யாழ்ப்பாணத்தில் பெருமழை பெய்து வருகிறது நுளம்புத் தொல்லை குடாநாடு முழுவதிலும் பெரும் பிரச்சினையாகிவிட்டது. மலேரியா வெகு வேகமாகப் பரவி வருகிறது.

ஆனால் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் மலத்தியோன் மருந்து குடாநாட்டில் இல்லை.

மலத்தியோனை குடாநாட்டுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தடை எதுவும் விதிக்கவில்லை.

மலத்தியோனை இங்கு கொண்டு வரமுடியாமற் போனமைக்கு கப்பல் வசதி கிடைக்கவில்லை என்பதும் அல்ல.

மலத்தியோனை எடுத்து வருவதற்குத் தேவையான வெற்றுக் கொள்கலன்களுக்குரிய பணம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு உரிய வேளையில் போய்ச் சேர்வதில் ஏற்பட்ட தாமதமே மலத்தியோன் கிடைக்காமைக்குக் காரணம் என்று நம்பிக்கையாக அறியவந்துள்ளது

மண்எண்ணெய் கொண்டு வருவதற்கும் இங்கிருந்து வெற்றுப் பீப்பாய்களைக் கொண்டு செல்ல முடியாது. கொழும்பில் வெற்றுப் பீப்பாய்களைக் கொள்வனவு செய்தே மண்எண்ணெயை நிரப்பிக் கொண்டு வரவேண்டும்.

அதே நடைமுறையே மலத்தியோன் கொண்டு வருவதற்கும் அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. முன்னர் மலத்தியோன் கொண்டு வரப்பட்ட வெற்றுக் கொள்கலன்களை விற்று வரும் பணத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6ஆவது மைல் கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (28446)

### ஆசிரியை தேவை

குமுதினி பெண்கள் தையல் பயிற்சி நிலையத்திற்கு பயிற்சி பெற்ற ஆசிரியை உடன் தேவை. 22-12-93ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: க. வீரசிங்கம், குமுதினி பெண்கள் தையல் பயிற்சி நிலையம், சாவல்கட்டு, ஆனைக்கோட்டை. (28437)

### கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர் சகல விதமான டயறிவகைகள், கிறிஸ்மஸ் கார்ட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி/6698)

### இந்தியா ருடே

இலங்கை ஏஜண்டான P.S. சுந்தரம் அன் சன்ஸ் அவர்கள் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-6696)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்ல ரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி, கப்பல் இனங்கள் குறுகிய காலத்தில் பயன் தரக் கூடியவை விற்பனைக்குண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, மீசாலை, (6852)

### O/L கணிதம் 1993

1993 O/L கணிதம் செய்கைகளும், விடைகளும் விற்பனையாகின்றன. விலை ரூ. 7-50/-. மங்களா கல்விச் சேவை வெளியீடுகள்: கிடைக்கும் இடம் பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீலங்கா, ஸ்ரீகாந்தா, சுன்னாகம் தனலக்சுமி, கொக்குவில் மது புத்தகசாலை, (6742)

## A/L 93

பகல் நேரம்
(DAY CLASSES)
சனி – ஞாயிறு
(SAT. - SUN.)

மீட்டல் வகுப்பு

**14-12-93 இல்**
ஆரம்பமாகி விட்டன
(8 மணி)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ் பாணம்
(சி-6802)

## அளவையியல்

மாலை நேர துரித மீட்டல் வகுப்பு (94)
ஆரம்பம்: 17–12–1993
3-00 மணி
திரு சே கிலி க
(B.B.A.)

வாரத்தில 5 நாட்கள் வகுப்புக்கள
(10 மணித்தியாலங்கள்)

சுபேன்ஸ் கல்வி நிலையம்
(எழிலகத்திற்கு அருகில்)
(28441)

---

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி
மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 3

## இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவு இலக்கியச் சந்திப்பு

இடம்: யாழ்ப்பாணம் நாவலர் மண்டபம்
காலம்: 19 – 12 – 1993
ஞாயிறு காலை 9-00 மணி
தலைவர்: கலாகேசரி ஆ தம்பித்துரை
தொடக்கவுரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர் - தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)


★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

ஏ. சி பொன்னுத்துரை,
வைத்திய கலாநிதி எஸ் சிவபாகரன்.
இணைச் செயலாளர்கள்.

மணிவிழாச் சபை,
குரும்பசிட்டி. [28427]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் துரையப்பா யோகேஸ்வரன்

மண்ணில்: 27 – 07 – 1958
விண்ணில்: 27 – 12 – 1992

திதி: 16 - 12 - 1993

எங்கள் குலத்தின் எழில் மிகு தெய்வம்

பொங்கிய அன்புள்ளத்தால்
புவியிடைச் சிறந்து நின்றே
எங்குலம் காத்து நின்ற
எழில் மிகு தெய்வம் நீ
இங்கெமைப் பிரிந்தோராண்டே
எய்திற்றெ பிரிவாந் துன்பம்
எங்ஙனம் தாங்குவோமே!
இப்புவி மீது நாமே!
அன்பெனும் குன்றில் நின்றாய்
அரும்பணி பலவும் ஆற்றி
நன்மையைப் புகழை எல்லாம்
நங்குலம் அடையச் செய்தாய்
இன்னலைக் கருதாய் ஆகி
இடைவிடாதுழைத்தல் செய்தாய்
பன்னருங் குணத்தோய்! யோகேஸ்!
பாரிடை வணங்குவோமே!

பிரிவால் துயருறும்:
தாயார், சகோதர, சகோதரிகள்,
அத்தான், அண்ணி, பெறாமக்கள்,
உற்றார், உறவினர்கள்

அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (6854)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 07 — 06 — 1912



உதிர்வு: 27 — 12 — 1992

## அமரர் சரவணமுத்து கனகசபை

திதி: 16 – 12 – 1993

பாசமிகு தெய்வமே! உங்கள்
பொற்பாதங்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பராய் தெற்கு.

---

# வெள்ள அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

யாழ்ப்பாணம், டிச. 16
அரியாலை, மணியம்தோட்டம், சங்கானை, தொல்புரம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் நிவாரண பொதிகளை வழங்கியுள்ளனர்.

இப்பகுதியில் கடுமையாக பாதிக்கப்பட்ட 500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந் நிவாரண பொதிகள் வழங்கப்பட்டதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் உப தலைவர் திரு. பாலகிருஷ்ணன் தெரிவித்தார். (இ-17)

---

## POST GRADUATE DIPLOMA/ DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992/93

The interview for the above course will be held on 1993-12-17 from 2-00p m. to 4-00 p.m. in the Board Room of the University of Jaffna.

The list of selected candidates for the interview is placed in the University Notice Board. Please collect the interview letter personally at the Academic Branch, University of Jaffna.

— REGISTRAR.
University of Jaffna.
1993-12-14
(C-6707)

---

## "வெட்டுமுகம்" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிச 16
இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய 'வெட்டுமுகம்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற உள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் வெளியீட்டு உரையை கவிஞர் இ. முருகையன் அவர்களும் விமர்சன உரைகளை க. தணிகாசலம், செம்பியன்செல்வன், கலாநிதி சோ. கிருஷ்ணராசா ஆகியோரும் ஆற்ற உள்ளனர். (க)

---

அளவெட்டி — நாகேஸ்வரம்

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் அன்பர்களுக்கு முக்கிய அறிவித்தல்

எமது தேவஸ்தானத் திருப்பணித் தொண்டன் என்றும், பூசகர் என்றும், எனது சிஷ்யன் (சீடன்) என்றும், எனது சகோதரர் என்றும் தம்மை அறிமுகப்படுத்தி, பல்வேறிடங்களில் ஒரு சிலர் செயற்படுவதாக அறிகிறோம். அவ்விதமாக எனது சீடன் என்ற முறையில் எவருமேயில்லை. அத்தகைய சகோதரருமில்லை, திருப்பணித் தொண்டருமில்லை, பூசகருமில்லை. ஆகையால் இத்தகையோரின் செயற்பாடுகளுக்கு, நாம் எவ்வகையிலும் பொறுப்பல்லர் என்பதை இதனால் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
அருட்கவி. சீ. விநாசித்தம்பி
மேற்படி தேவஸ்தான பரிபாலனசபைப் போஷகர்.
(சி/6716)

---

வலி. வடக்கு
ஐக்கிய இளைஞர் வள நிலையம்
இளைஞர் சேவை மன்றத்தின்
அனுசரணையுடன்
நடத்தும்

## மகளிர் நடமாடும் பயிற்சி நெறிக்கான கண்காட்சியும் நிறைவு விழாவும்

இடம்:- யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
காலம்:- 16 – 12 – 1993 (வியாழன்)
காலை 9. 30 — 6. 00 வரை

பிரதம விருந்தினர்:-
பிரதேச செயலர் வலி. வடக்கு
சிறப்பு விருந்தினர்;
மாவட்ட இளைஞர் அதிகாரி
(யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கு பிரியதர்சன்
உபதலைவர்

ஆ. தரணிதரன்
நிகழ்வுகள் ஒன்றுகூடல்
இணைச் செயலாளர்

(6744)

---

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வரையறுள்ளது

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

**18 - 12 - 1993**
சனிக்கிழமை காலை 10-00 மணி

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 18 - 12 - 1993 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. சொலமன் சூ. சிறில் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. சங்க உத்தியோகபூர்வ அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல், சகல பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் ஏககாலத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வறிவித்தல்களையும் தங்களது மேலான கவனத்திற்கு அறியத் தருகிறோம்.

நன்றி:
கூட்டுறவுச் சேவையில்,

திரு
த. பரஞ்சோதி,
பதில் பொது முகாமையாளர்.

திருமதி
பு நவரட்ணம்,
செயலாளர்.

யாழ்ப்பாணம்.
15-12-1993. (சி-6714)

---

## சூரன் போர்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயிலில் பிள்ளையார் கதை, கஜமுகாசூரன் போர் எதிர்வரும் **18 – 12 – 1993** சனிக்கிழமை பிற்பகல் **3. 00** மணியளவில் ஆரம்பமாகும்.

இங்ஙனம்
உபயகாரர்.
(6743))

---

தென் இந்திய திருச்சபை
யாழ் பேராயம்

## பெண்கள் ஒன்றியம் தொழிற் பயிற்சி நிலையம் மானிப்பாய் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

இடம்: தொழிற் பயிற்சி நிலையம்
கிறீன் வைத்தியசாலை வளவு
மானிப்பாய்

காலம்: **16 - 12 - 93** வியாழன்
மாலை **3-00** மணி முதல்

சிறப்பு விருந்தினர்:
பேராயர் **D J.** அம்பலவாணர்
டாக்டர் திருமதி **C** அம்பலவாணர்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்

முக்கிய குறிப்பு:
தையல் வேலை, தலை அலங்காரம், சமையற் கலை, கைப்பணி ஆகிய துறைகளில் முற்றிலும் இலவசமாக பெண்களுக்கான தொழிற் பயிற்சியின் புதிய 6 மாத வகுப்புகள் ஜனவரியில் ஆரம்பமாகும்.
சேர விரும்புவோர் மேற்படி நிலையத்தில் இன்றும் நாளையும் (16 ஆம், 17 ஆம் திகதிகளில்) தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

செயலாளர்,
பெண்கள் ஒன்றியம்,

யாழ். பேராயம்,
தென்னிந்தியத் திருச்சபை. (சி-6715)

---

## விற்பனையாகின்றன

மக்கள் வங்கி
எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்
போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி

## ❊ பொதுவிவேகம், மொழித்திறன் ❊

ஆக்கம்:– T. லோகநாதன் B. A.

அஸ்ரன் பதிப்பக வெளியீடு
விலை:- 115/-

(எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்)
(6807)

---

## சாவகச்சேரி நகரசபை ஆதனவரி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டு 4 ஆம் கந்தாயத்திற்குரிய ஆதனவரியை தண்டமின்றி 31-12-93 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12.30 மணி வரை செலுத்திக் கொள்ளலாமென்பதையும் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 வீதமும் ஏனைய ஆதனத்திற்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.
எனவே, 31 12-93 க்கு முன் வரிகளை நிலுவையின்றிச் செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்கும் படி சகலரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 14-12-93 (6717)

---

## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

## சொர்ணலிங்கம் டினேஸ்குமார்

(குட்டிக்கண்ணா)

தோற்றம்: 16 – 08 – 1986
மறைவு: 16 – 12 – 1987

நீலவண்ணன் வேண்டுதலில்
நின்மலனே உன்னைப் பெற்றோம்
நீண்டநாள் வாழ்வில்லை
என்றெமக்கு உணர்த்திச் சென்றாய்
ஆண்மகவு பெற்றெடுத்தோம் ஆறுதலும்
அடைந்திருந்தோம் ஆறாத் துயரில் விட்டு
நிமலனடி நீ அடைந்து விட்டாய்
ஆண்டும் ஆறு சென்றபோதும் துயரமதை
சுமக்கின்றோம் எம்துயரை நீக்க மீண்டும்
ஓடிவந்து பிறந்திடுவாய் என் வயிற்றில்.

உன் ஆத்ம சாந்திக்கு இறைஞ்சும்:
அப்பா, அம்மா, சகோதரிகள்,
அச்சாப்பா, அச்சாம்மா,
(சதாசிவம் குடும்பத்தினர்)
அப்பப்பா, அப்பம்மா,
(சண்டிலிப்பாய், கனகரத்தினம் குடும்பத்தினர்)
மாமா, மாமி, பெரியப்பா,
பெரியம்மா, மற்றும்
உற்றார், உறவினர்கள்

சந்தை மேற்கு ஒழுங்கை,
மானிப்பாய். (28450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## கால்ஒடிந்த கழுதை!

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு கடந்த இரண்டு மாதங்களாக வெளிமாவட்ட, வெளிநாட்டுக் கடிதங்கள் எதுவும் வந்துசேரவில்லை. கடந்த ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதியன்றே கப்பலில் கடைசியாகக் காகிதப் பொதிகள் வந்தன. அதற்குப் பின்னர் கப்பல்கள் பல தடவைகள் வந்து போய்விட்டன. ஆனால் கடிதங்கள் தான் வரவில்லை!

யாழ். மாவட்ட மக்கள் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக முன்னின்று உழைக்கிறார்கள். ஆகையால் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க வேண்டுமென்றால் யாழ்ப்பாணத்து மக்களை ஈவிரக்கமின்றி, இம்மை மறுமையின்றி வருத்தவேண்டும்; கழுத்தில் திருகவேண்டும் என்பது சிங்கள அரசின் சித்தாந்தம்.

அதனாலேயே இராணுவத் தாக்குதல்களுக்கு, அட்டூழியங்களுக்கு மேலதிகமாக பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை உட்பட உளவியல் போரையும், தாக்குதல்களையும் அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது. தபால் கிடைப்பதில் உள்ள தாமதம் உளவியல் போரின் ஓர் அங்கமே — பொருளாதாரத் தடையின் விளைவே.

செய்யக்கூடாத அநியாயங்கள் எல்லாவற்றையும் செய்யும் அதேவேளையில், வெளி உலகத்துக்கு நல்லவனாகக் காட்டிக்கொள்ளவும், தமிழர்கள் இன்னமும் தனது பிரசைகளேஎன்று உரிமைகொண்டாடவும் அற்பசொற்ப உணவுப் பொருள்களையும், நிதி வசதிகளையும் அரசு செய்து வருகிறது.

அந்த வகையில் கப்பல் மூலமான கடிதப் போக்குவரத்துக்கு அரசு இணக்கம் தெரிவித்து அதற்கான வசதியை செய்துள்ளது. ஆனால் யாழ். குடாநாட்டைப் பொறுத்தமட்டில் தபாற்சேவை கால் ஒடிந்த கழுதையாகிப் போய்விட்டது. அது தொடர்ந்தும் பொதி சுமக்குமா என்ற கேள்வியையும் தோற்றுவித்துள்ளது.

குடாநாட்டுக்குரிய தபால்கள் இங்கு வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பது இது முதலாவது தடவை அல்ல. குடாநாட்டுக்கு வெளிமாவட்ட, வெளிநாட்டுத் தபால்கள் மாதக்கணக்கின் பின்னர், கொழும்பில் பொதி பொதியாகத் தேங்கிய பின்னர் வந்து சேர்வது என்பது கடந்த மூன்று வருடங்களாகவே ஒரு நடைமுறையாகிவிட்டது. வேண்டுமானால் அதுவே நியமம் ஆகிவிட்டது என்றும் கூறலாம்.

இங்கே தான், உள்ளூரில் உள்ள தபாற்பகுதி அதிகாரிகளின் மக்கள் நலன் நாடிய சேவையில் எவருக்குமே இயல்பாக அதிருப்தியும், சந்தேகமும் தோன்றும். அது தவிர்க்க முடியாதது. வருடக்கணக்காக இழுபடும் இந்தப் பிரச்சினையை பெரும் விவகாரமாக்கி, அதற்கு நிவாரணம் தேட முடியாதா என்று பொதுமக்கள் கேட்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.

ஆயினும் —

தபாற்பொதிகளைக் கப்பலில் கொண்டு வருவதில் உள்ள தாமதத்துக்கு இங்குள்ள அதிகாரிகள் அங்குள்ளவர்களையும், மக்கள் இங்குள்ள அதிகாரிகளையும் குறைகூறுவதினாலும் சந்தேகப்படுவதினாலும் ஆகப் போவது எதுவுமில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு எஞ்சியுள்ள ஒரேயொரு தொலைத்தொடர்பு வசதி தபாற் தொடர்பு தான் அதற்குரிய தபாற் போக்குவரத்து சேவையை ஸ்ரீலங்கா நிர்வாகத்தால் சீராகச்செய்ய முடியாவிடில் அதனை தமிழீழத்தில் சொந்தத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய மாற்று வழி குறித்து ஆராயப்படவேண்டும். குடாநாட்டில் உள்ள ஸ்ரீலங்காவின் தபால் நிலையங்களை மூடிவிட்டு, தனியார் முகவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கலாம்.

அப்போதாவது கொழும்பு அரசு கண்விழிக்கிறதா என்று பரீட்சித்துப் பார்க்கலாம். உலகத்துக்கும் இப்படி ஒரு மனித உரிமை மீறல் நடக்கிறது என்பதும் தெரியவரும்!

# புலிகளின் தாக்குதல் இலக்கு தெரியாது படையினர் குழப்பம்

### அனேகமாக எல்லா முகாம்களும் உஷார் நிலையில்

யாழ்ப்பாணம், டிச. 16

பூநகரித் தாக்குதலை அடுத்து விடுதலைப்புலிகளின் தாக்குதல் இலக்கு எதுவாக இருக்கும் என்பது பற்றிச் ஸ்ரீலங்காப் படையினர் குழப்பம் அடைந்துள்ளனர். இந்தக் குழப்பத்தினால் எப்பகுதியை முழுமையாகப் பாதுகாப்பில் வைப்பது என்ற தீர்மானம் எடுப்பதில் படையினர் திணறுகின்றனர்.

ஒருமுறை பலாலியைத் தாக்கலாம் என பலாலிக்குப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதும்—

வன்னி எல்லைப் புறத்தைத் தாக்கலாம் என அங்கு பாதுகாப்பைப் பலப்படுத்துவதும்—

மன்னாரைத் தாக்கலாம் என அங்கு முகாம்களை வாபஸ் பெறுவதும்—

கிழக்கைத் தாக்கலாம் என கிழக்கில் சகல முகாம்களையும் உஷார்ப்படுத்துவதும்—நாளாந்த நிகழ்வுகளாக மாறி வருகின்றன.

கடற்புலிகளின் வளர்ச்சியால் ஏற்பட்ட அச்சம் காரணமாக கடலோடு ஒட்டிய முகாம்களையே விடுதலைப் புலிகள் தாக்குவர் என்ற அச்சமும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரீதியில் முல்லைத்தீவு முகாம் தாக்கப்படலாம் எனவும், கொழும்புத்துறைமுகம் தாக்கப்படலாம் எனவும் ராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

### அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்

## சிறிமாவோவுக்கே கூடுதல் ஆதரவாம்

### சிங்கள வார இதழ் கணிப்பு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவோர் பற்றி கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி உள்ளது.

அதில் எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவே கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளார்.

'சத்தியயேஹண்ட்' என்ற இந்த பத்திரிகையின் அபிப்பிராய வாக்கெடுப்பின் விவரம் வருமாறு:-

சிறிமாவோ பண்டாரநாயக்கா 5,367, சோமவங்ச அமரசிங்கா 3,654, காமினி திஸநாயக்கா 3,221, சந்திரிகா பண்டாரநாயக்கா 2,143, அநுரா பண்டாரநாயக்கா 2,022, தினேஷ் குணவர்த்தனா 1,405, டி.பி விஜேதுங்க 946, ரணில் விக்ரமசிங்க 553. (இ-9)

## வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், டிச 16

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தையல் பயிற்சி போதனாசிரியர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி 7-1-94 ஆகும்.

மேலதிக விவரங்களையும் மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் யாழ் செயலக கிராம அபிவிருத்திக் கிளையில் பார்க்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மத்திய மாகாண சபை:

## நம்பிக்கையில்லா பிரேரணை அடுத்த வாரம் விவாதம்

கொழும்பு, டிச. 16

மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப்பிரேரணை இம் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்ற அரசுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு மாத காலக்கெடு முடிவடைந்த பின்னரே நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு வர இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## வயல்களில் பூச்சித் தாக்கம்

வலி வடக்கு பிரதேசப் பகுதியில் உள்ள நெல்வயல்களில் பெரும்பகுதி பூச்சித் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கிறது. குறிப்பாக அளவெட்டி கந்தரோடைப் பகுதிகளில் உள்ள வயல்களில் மடிச்சுக்கட்டி எரிபந்தம் போன்ற நோய்களால் நெற்பயிர்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. (க-13)

## பட்டியில் நின்ற மாட்டை திருடி இறைச்சி விற்பனை

### எதிரிகளுக்கு அபராதம்

தென்மராட்சி, டிச. 16

பட்டியில் நின்ற மாட்டைத் திருடி அதனை அறுத்து விற்றதாகக் கூறப்படும் இருவர் பளை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

பளை அரசன் நகர் பகுதியில் இச்சம்பவம் நடந்தது.

சந்தேகநபர்கள் இருவரும் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த நீதியாளர் பூவேந்தன் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் சட்டவிரோதமாக மாடு அறுத்ததுக்காக தலா ஆயிரம் ரூபா அபராதமாகவும் மாட்டுக்குரிய நட்டஈடாக ஐயாயிர ரூபா செலுத்துமாறும் தீர்ப்பு வழங்கினார்.

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால் ஒன்றரை மாதமும் நட்டஈட்டுத் தொகையைச் செலுத்தத் தவறினால் இரண்டரை மாதமுமாக மொத்தம் நான்கு மாதங்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபடுமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ — 117)

## வடமராட்சியில் காய்ச்சல் பரவுகிறது

வடமராட்சி, டிச. 16

வடமராட்சிப் பகுதியில் ஒருவித காய்ச்சல் பரவி வருகிறது.

சமீபத்தில் பெய்த மழையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

# கல்முனையில் தமிழர் வாழும் பகுதியில் சிங்கள அகதிகள்

கல்குடா பொலிஸ் நிலைய பகுதியில் தற்காலிகமாகத் தங்கி இருக்கும் சிங்கள அகதிகளை தமிழ்க் குடும்பங்கள் வசித்து வரும் பகுதியில் குடியமர்த்துமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

கல்குடாவில் வாவிக் கரை ஓரமாக அமைந்திருக்கும் தென்னை அபிவிருத்திச்சபைக் காணியிலேயே சிங்கள அகதிக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட உள்ளன.

அரசுக்குச் சொந்தமான பெரும் விஸ்தீரணம் கொண்ட இந்தக் காணி தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு மத்தியில் அமைந்துள்ளது.

1990 இல் யுத்தம் ஆரம்பமான பின்னர் அகதிகளாக கொழும்புக்குச் சென்ற சிங்களக் குடும்பங்களே தற்போது கல்குடா திரும்பி பொலிஸ் நிலையப் பகுதியில் தற்காலிகமாகத் தங்கி உள்ளனர். (இ)

# மக்கள் மனக்கோலத்தை மாற்றிய ஆறுமுகநாவலரின் சமய பிரசாரம்

### குருபூசையில் பண்டிதர் சச்சி

யாழ்ப்பாணம், டிச. 16

அந்நிய ஊடுருவல்களினால் மத மாற்றங்கள் ஏற்பட்டன. இதிலிருந்து சைவத்தைக் காப்பாற்ற சமூக ஆறுமுகநாவலரின் உளவியல் ரீதியான பிரசாரம் பெரிதும் உதவியது.

யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் நடத்திய நாவலர் குரு பூசையில் கலந்து கொண்டு பேசிய பண்டிதர் க. சச்சிதானந்தன் இவ்வாறு கூறினார்.

கைலாசபதி கலை அரங்கில் இந்து மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் விழா நடைபெற்றது.

பண்டிதர் சச்சிதானந்தன் மேலும் கூறியதாவது;-

ஆயுத முனையில் அச்சுறுத்தி இடம்பெற்ற மதமாற்றங்களை அடுத்து பிரித்தானியர்கள் இங்கு வந்தவேளை வெகுமதிகளை வழங்குவதன் மூலம் மக்களை மதம் மாற்றும் முயற்சிகளில் இறங்கினார்கள். இக் காலகட்டத்தில் நாவலர் பெருமான் மக்களின் மனக்கோலங்களை மாற்ற எளிய சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் சிறிய கதைகளையும் வினா விடைகளையும் எழுதினார். இந்தியாவிலும், இலங்கையிலும் அன்னிய ஊடுருவல்கள் இடம்பெற்ற சமயம் தமிழை வளர்ப்பதன் மூலம் சைவத்தைக் காக்கவே அவர் பல நூல்களை எழுதினார்.

எழுதப் படிக்கத் தெரியாத கிராமிய மக்களிடம் விரதம் மற்றும் ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்கள், கிரியைகள், அனுட்டானங்கள் பற்றித் தெளிவும் கவர்ச்சியும் மிக்க பிரசாரங்களை மேற்கொண்டார். புராணபடனங்கள் போன்ற ஊடகங்கள் மூலம் அவர் மேற்கொண்ட பிரசாரங்கள் மக்களின் மனக்கோலத்தை மாற்றவும் சைவம் வளரவும் பெரிதும் உதவின.

தென்னிலங்கையில் சைவ சமயத்தவர்கள் தினமும் பத்துப்பேர் வீதமாக இஸ்லாம் மதத்திற்கு மாறுகிறார்கள். இது ஏன்? எமது சமயம் பிற மதத்திற்கும் நவீன காலத்திற்கும் ஈடுகொடுக்க முடியாததா? இதை நாம் சிந்திக்க வேண்டும்.

''இந்துநெறி'' சைவத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றும் ஏடாக அமைந்துள்ளது. இது மென்மேலும் விரிவடைய வேண்டும் என்றார்.

''இந்துநெறி'' நூலின் முதல் பிரதியை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையிடம் இருந்து திரு. து. அழகரத்தினம் பெற்றுக் கொண்டார்.

''இந்து நெறி'' நூலை வெளியிட்டு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடப் பேராசிரியர் பொ. [illegible] பிள்ளை பேசும்போது.

கலாநிதி சி. க. சிற்றம்பலம், திரு. செ. சிவஞானம் ஆகியோரும் பேசினார்கள். செல்வி தி. பாலசரோஜினியின் இறை வணக்கமும் இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர், மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அமரர் [illegible] ராசாவின் புதல்வர்கள் [illegible] (க-111)

# குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு போஷாக்கு புனர்வாழ்வு திட்டம்

### மன்னாரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேசத்துக்கான பிரிவு அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

இப்பிரிவின் கீழ் முதற்கட்டமாக குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு புனர்வாழ்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட மக்கள் வங்கியுடன் இணைந்து 93/94ஆம் ஆண்டுக்கான பெரும்போக விவசாயத் திட்டத்துக்காக 750 பேருக்கு 10,000 ரூபா வீதம் 75 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக விவசாயத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 27 லட்சம் ரூபாவும், முல்லை மாவட்டத்தில் 25 லட்சம் ரூபாவும், மன்னார் மாவட்டத்தில் 6 லட்சம் ரூபாவும், வவுனியா மாவட்டத்தில் 20 லட்சம் ரூபாவும், கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி மாவட்டத்தில் குடியமர்ந்துள்ள விவசாயிகளுக்காக 15 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக பணம் அல்லது விதைதானியமும், இரண்டாம் கட்டமாக உரம், கிருமிநாசனி என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் விவசாயத் திட்டத்திற்கு, உதவுவதற்கென அண்மையில் முல்லை மாவட்டத்திலுள்ள முள்ளியவளையில் விவசாய சேவை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென ஒரு விவசாய சேவை நிலையம் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த மாதம் 75 சிறுவர் பாடசாலைகளுக்கான ஆசிரியர் பயிற்சி நெறியும் ஒரு லட்சம் ரூபா செலவில் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 40 அங்கத்துவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறியும் 50 ஆயிரம் ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

எல். ஆர். ஜீ. திட்டத்தின் கீழ் முல்லை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்காக புதிய குடிசைகள் அமைக்கும் வேலைத்திட்டமும் நடைபெற்று வருகின்றது. (க-162)

# இராணுவத்தின் கட்டமைப்பையே ஆட்டம் காண வைத்த தாக்குதல்

### மன்னார் சிறப்புத் தளபதி உரை

வடமராட்சி டிச. 16

மண்கிண்டிமலை முகாம் தாக்குதல், யாழ்தேவி நடவடிக்கையின் போது நடத்தப்பட்ட தாக்குதல், பூநகரி முகாம் தாக்குதல் ஆகியவற்றால் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டமைப்பே ஆட்டம் கண்டுள்ளது.

பூநகரி வெற்றி நாளின் மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் பருத்தித்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் மன்னார் சிறப்புத் தளபதி திரு. கதிரவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற பதுங்கு தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட இராணுவத்தின் உடல்களை மீட்க அப்போது மற்றோர் இராணுவ அணி ஒன்று அவ்விடத்துக்கு விரைந்து வந்தது.

ஆனால் 1993 ஆம் ஆண்டு அதாவது தற்சமயம் வடதமிழீழத்தில் பலமான கூட்டுப்படைத் தளங்கள் எம்மிடம் முழுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளன.

மேலும் பூநகரியில் 1000த்துக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அப்போது அவ்விடத்துக்கு இராணுவத்தால் முன்னர் போன்று வர முடியாத நிலை ஏற்பட்டது.

தர்மத்தின் அடிப்படையில் தான் இறந்த இராணுவத்தின் உடல்களை கொழும்புக்கு அனுப்புவதற்கு முனைந்தோம்.

நாம் பூநகரியில் கைப்பற்றிய ஆயுதங்கள், விசைப்படகுகள் இவை எல்லாவற்றையும் விட அங்கு வீரச்சாவடைந்த போராளிகளின் தியாகங்களை பெருமையாக நினைத்து பார்க்கிறோம். எங்களுக்குள் அதன் வெற்றியை பற்றி சந்தோசப்படுகிறோம். வெற்றிப் பாடல்களை பாடிக்கொண்டிருக்கிறோம்.

1992ஆம் ஆண்டு வலம்புரி நடவடிக்கையின் போது இராணுவ தளபதிகளினதும், இராணுவ அதிகாரிகளினதும் திட்டங்களோடு எமது பூநகரி மண் எதிரியிடம் பிடிபட்டது.

அங்கே முப்படைத்தளபதிகளினதும், பாதுகாப்பு அமைச்சினதும், இராணுவ அதிகாரிகளினதும் திட்டங்களின்படி எவ்வளவு பாதுகாப்பை கூட்ட முடியுமோ அவ்வளவு பாதுகாப்புடன் முகாமை திறம்பட அமைத்து கொண்டார்கள். படைகளை குவித்தார்கள். இராணுவ தளபாடங்களையும், டாங்கிகளையும், விசைப்படகுகளையும் அங்கே இறக்கினார்கள்.

பின்னர் எங்களுக்கும் எங்களது மக்களுக்கும் எதிராக அங்கிருந்து தாக்குதல்களை நடத்தினார்கள்.

எமது நெல் விளையும் வயல்களில் மிதி வெடிகளை விதைத்தார்கள்.

அன்றில் இருந்து முகாம் தாக்குதல் நடைபெறுவதற்கு முதல் நாள் வரை இராணுவ படைகளினதும், பாதுகாப்பு அமைச்சினதும் இராணுவ தளபதி அதிகாரிகளினதும் பாதுகாப்பு திட்டங்களை உடைத்தெறிய புதிய மாற்று திட்டத்தை வகுத்தோம்.

பத்தாம் திகதி தாக்குதல் ஆரம்பமானது.

எமது சிந்தனைகள் எல்லாம் தலைவனின் திட்டத்தின் படி பூநகரியை கைப்பற்றி விட வேண்டும் என்பது தான்.

அங்கு பலமாக நின்ற எதிரியுடன் நின்று போராடினோம். எமது இலக்குகளை அடைந்து பெரு வெற்றியுடன் திரும்பினோம்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-173-17)

## குடாநாட்டில் தொழுநோயாளர்

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ். குடாநாட்டுப் பகுதியில் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் வரை 53 தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் தொழுநோயாளர்கள் 1988இல் 30 பேரும், 1989இல் 60 பேரும், 1990இல் 40 பேரும், 1991இல் 102 பேரும், 1992இல் 91 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-162)

## குடும்பத்திற்கு 25 கோழிகள்

யாழ்ப்பாணம், டிச. 16

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை தெரிவு செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமுகமாக கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் ஊடாக பல்வேறு உதவிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் கரணவாய் கிழக்கிலும், கரணவாய் தெற்கிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினரால் ஒரு குடும்பத்திற்கு 25 கோழிகளும் மற்றும் தீவனம், உபகரணம் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. (ஒ)

## கரவெட்டியில் பனை வளர்ப்பு

வடமராட்சி, டிச 16

கரவெட்டி அந்தணன் திடல் கிராமத்தில் பனை வளர்ப்புத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மூவாயிரம் பனை விதைகள் நடப்பட்டுள்ளன.

உடுப்பிட்டி நெல்லியடி — கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் நிறுவனத்தின் அனுசரணையுடன் பனை விதைகள் நடப்பட்டுள்ளன. (இ-173)

### வடமராட்சியில்

## பாவனைக்கு உதவாத நிறுத்தல் அளவைகள்

வடமராட்சி வடக்குப் பகுதியில் நிறுத்தல் அளவைகள் பரிசோதனை செய்யப்பட்டபோது பல நிறுத்தல், அளவைகள் பாவனைக்கு ஏற்றவைகள் அல்ல என நிராகரிக்கப்பட்டன.

சில நிறுத்தல் அளவைகள் சிறுசிறு திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

யாழ் செயலக நிறுத்தல் அளத்தல் பகுதியினரால் இப் பரிசோதனை பருத்தித்துறை நகரசபையில் வைத்து அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. (இ-173)

# நீரிழிவிலிருந்து தப்ப ஒரே வழி தவிடு போக்காத அரிசி உண்பதே!

### வைத்திய நிபுணர் கருத்து

கொழும்பு, டிச. 16

நீரிழிவு நோயின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் ஒரேயொரு வழி தவிடு போக்காத பச்சை நெல்லரிசியை உணவுக்குப் பயன்படுத்துவதே ஆகும்.

நீரிழிவு நோய் நிபுணரும் இலங்கை நீரிழிவுச் சங்கத்தின் பொதுச்செயலாளருமான டாக்டர் மகேன் விஜேசூரியா இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போதைய ஆய்வுகளுக்கு அமைய இந்நோய் பீடிப்பதற்கான அடிப்படைக் காரணம் [illegible]ான உணவு வகைகளை உட்கொள்வதே ஆகும் என அவர் சுட்டிக் காட்டுகிறார்.

கிராமிய இயற்கை உணவுகளைத் தவிர்த்து, குழந்தைகளுக்குத் தாய்ப்பாலூட்டாது பால்மா உணவு வகைகளை வழங்குவதாலேயே இவ்வளவு பயங்கரமாக இளைஞர் மத்தியில் நீரிழிவு நோய் அதிகரிக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நீரிழிவு நோய் பரவிவரும் வேகத்தின் படி மேலும் ஆறு ஆண்டுகளில் ஒரு கோடி நோயாளிகள் இலங்கையில் இருப்பார்கள் என்கிறார் அவர்.

நீரிழிவு நோய் இருமிகளாலோ, வைரசுகளாலோ ஏற்படுவதில்லை என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை நீரிழிவுச் சங்கம் பாண், வெள்ளையரிசி போன்றவற்றின் விலையை அதிகரிக்க வேண்டும் எனவும் தவிடு சேர்ந்த பச்சை நெல்லரிசியின் விலையைக் குறைக்க வேண்டும் எனவும் அரசுக்குச் சிபாரிசு செய்துள்ளது என்றும் அவர் கூறினார். (க-6)

**கண்ணை இமை காக்கும்**
**மண்ணை மரம் காக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராசையா செபஸ்ரியாம்பிள்ளை

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், 42/5, விதானையார் வீதி, சுண்டுக்குளியில் வசித்தவருமான இராசையா செபஸ்ரியாம்பிள்ளை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரிதிரேஸாவின் அன்புக் கணவரும், சாந்தினி, சறோஜினி, றாஜினி, வாசந்தினி, றோகினி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரன், றஞ்சிதன், நாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜஸ்மின், ரிஷானி, டிலான் ஆகியோரின் பாசமுள்ள பேரனும், சாமிநாதர், சுவக்கின்பிள்ளை, ஜெசி, யாசிந்தா ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. கிறிஸ்ரி
(மருமகன்)

(28453)

## கனகசபாபதி கந்தையா
(கொழும்பு சினிமா தியேட்டர் மனேஜர்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவரும், ஓய்வுபெற்ற கொழும்பு சினிமாத் தியேட்டர் மனேஜருமான திரு. கனகசபாபதி கந்தையா 15 - 12 - 1993 இல் காலமானார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபாபதி – அழகராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற மருதடி விநாயகர் முன்னாள் ஆலய உரிமையாளருமான திரு. சி. கணேசரட்டினசிங்கதின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன், அழகராசா, திருவாளர் தேவன் (இங்கிலாந்து), திருமதி லீலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி (இங்கிலாந்து), சோமகாந்தி (இங்கிலாந்து), அரசு (கொழும்பு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15 – 12 – 1993 பி.ப. 2 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
அன்பு மனைவி க. நாகேஸ்வரி,

திருமதி க நாகேஸ்வரி,
காரைநகர் றோட்,
மானிப்பாய்.

[28447]

## கதிரித்தம்பி ஏரம்பு
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட கதிரித்தம்பி ஏரம்பு அவர்கள் புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான கதிரித்தம்பி— யோகாம்பிகையின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான சட்டம்பியார் நல்லதம்பி — வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன் (இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்), தியாகராஜா (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி), சண்முகானந்தராஜா (பிரான்ஸ்), கணேசானந்தராஜா (லிகிதர் வலிகாமம் வடக்கு பிரதேச சபை), முருகானந்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி), யோகேஸ்வரி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற நல்லதம்பி (ஆசிரியர்), தர்மலிங்கம், அம்பலவாணர் (கனடா), பராசக்தி, காலம்சென்ற முத்துக்குமாரு ஆகியோரின் சகோதரரும், வித்துவான் கனகசபை, கற்பகம், காவேரி, காலம்சென்ற தங்கரெத்தினம், நவநீதம், அ. ந தம்பிராசா (இளைப்பாறிய விகிதர்), காலம்சென்றவர்களான பொன்னம்மா, இராசம்மா மற்றும் அ. ந. பசுபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஏரம்பு தியாகராஜாவும்
சகோதரர்களும்

18/4, B. A. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(27451)

## திருமதி சிவபாக்கியம் செல்வராசா

வளலாயைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயில் வசித்தவருமாகிய திருமதி சிவபாக்கியம் செல்வராசா 15-12-1993 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசாவின் (ரீமேக்கர்) அன்பு மனைவியும், தருமரத்தினம், ஜெயசீலரத்தினம் (U.K.), கமலலோசனி (ஆசிரியை), சந்திரவதனா, ரஞ்சிதமலர் (கனடா), தவமணிதேவி, கமலாதேவி, சற்குணதேவி (கனடா), சுதந்திரராஜா (U.K.) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11 00 மணியளவில் பக்கஸ் ஒழுங்கை, மானிப்பாயில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி செல்வரத்தினம்

பக்கஸ் ஒழுங்கை,
மானிப்பாய்.

(28455)

## சரஸ்வதி (நீலாயதாட்சி)

சரஸ்வதி (நீலாயதாட்சி) 09-11-1993 இல் அவரது பன்னாலை இல்லத்தில் விண்ணுலகை அடைந்தார்.

அன்னார் பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற K. சிறீ - சுந்தரமூர்த்தியின் (ஆரூரர்) மகளும், காலஞ்சென்ற மூளாயைச் சேர்ந்த அம்பலவாணரின் மருமகளும், ஒய்வுபெற்ற (A C C.U.) A. சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், திருமதி பராசக்தியின் அன்புத் தாயாரும் (லண்டன்), R லம்போதரனின் மாமியும், முரளி, சங்கர், சிவகாமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை அளவெட்டி மயானத்தில் 10-11-1993 இல் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
நா இராசம்மா

பன்னாலை,
தெல்லிப்பழை

2·1 2

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு 10 லட்சம் ரூபா

## மாகாண சபை ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச. 16
1994 ஆம் ஆண்டிற்கு பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டின் கீழ் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 10 லட்சம் ரூபாவை வடகிழக்கு மாகாண சபை ஒதுக்கியுள்ளது.

இதில் வீதி அபிவிருத்திக்கு ஒன்றேகால் லட்சம் ரூபாவும், கல்வி, கலாசார, பொது சுகாதார நடவடிக்கைகளுக்கு 5 லட்சம் ரூபாவும், விவசாய, கால்நடை, நீர்ப்பாசன, மற்றும் வன அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இரண்டே கால் லட்சம் ரூபாவும்,— ஆயுள்வேத மூலிகைத் தோட்ட நடவடிக்கைக்கு 25 ஆயிரம் ரூபாவும், வருமான வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு ஒன்றேகால் லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-162)

## இன்று

நுண்கலைத்துறை மாணவர்களுடைய ஆற்றுகைத்திறன்களை வெளிக்கொணர்வதற்கான ஒரு முயற்சியாக இன்று வியாழக்கிழமை பி. ப 3. 30 மணிக்கு ஆற்றல்களைத் தேடி எனும் இசை, நடன நிகழ்ச்சி ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (க)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், டிச. 16
வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று பிற்பகல் 5 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ''வாசகமும் வாதவூரரும்'' என்னும் பொருளில் விரிவுரை நடத்துவார். (ஒ-3)

★ ★ ★

விநாயகர் விரதத்தையிட்டு கல்வயல் இந்து இளைஞர் மன்றத்தினர் சாவகச்சேரி கல்வயல் வேதவனப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளி மாலை 6 30 மணிக்கு தசாவதாரம் என்னும் வில்லிசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளனர். (ஒ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

குருநகர் சென். ஜேம்ஸ் ஆலயத்தின் புனரமைப்பு நிதிக்காக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று வியாழன் யாழ். பரியோவான் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ பி.ப. 3 மணி: யங் ஹென்றீஸ் வி க அணி எதிர் பாடும்மீன் வி. க. அணி.

★ பி. ப. 4 மணி:- ஞானமுருகன் வி. க. அணி எதிர் ஸ்கந்தா வி. க அணி (ஒ-17)

## நியூயோர்க்கில் மிகப்பெரும் ஹெரோயின் வேட்டை!

25 கோடி டொலர் பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்துவை நியூயோர்க் துப்பறியும் பொலீஸார் கண்டு பிடித்தனர்.

மன்ஹட்டனில் உள்ள ஹோட்டல் அறை ஒன்றில் ஐந்து சூட்கேஸ்களில் இப்போதைவஸ்து வைக்கப்பட்டிருந்தது.

சுமார் 500 அதிகாரிகள் இந்த முற்றுகையை வெற்றிகரமாக நடத்தினார்கள் என்றும்—

இது தொடர்பாக 60 நபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

## தமிழகப் பொலீஸ் நவீன மயமாகும்

சென்னை, டிச. 16
தமிழகத்தில் பொலீஸ்துறை 20 கோடி ரூபா செலவில் நவீன மயப்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அரசு இதற்காக பத்துக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவித்த முதலமைச்சர் ஜெயலலிதா, தமது அரசு மேலும் 10 கோடி ரூபாவைச் செலவிடும் என்றும் கூறினார். (ஒ எ)

யாழ் பல்கலைக்கழக

# தமிழ்த்துறையின் வளர்ச்சிக்கு கைலாசபதி காரணம்

## நினைவுக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், டிச. 16
இந்திய பல்கலைக்கழகங்களிலும் பார்க்க எமது பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை வளர்ச்சியடைந்துள்ளது எனலாம். இதற்கு அமரர் பேராசிரியர் கைலாசபதியின் முயற்சியும் காரணமாகும்.

பேராசிரியர் கைலாசபதியின் நினைவாக இடம்பெற்ற 'சங்க இலக்கியம் பற்றிய எமது எண்ணங்கள்'' என்ற பொருளிலான கருத்தரங்கைத் தொடக்கி வைத்துப் பேசிய யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது;

சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் இருந்த பெரும் புலமையினால், பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியம் போன்ற தமிழ் நூல்களின் முக்கியத்துவத்தை உலகறியச் செய்தவர் அவர். தனது எழுத்துக்கள் மூலம் அவர் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்றார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தனது தலைமை உரையில்

யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், தமிழ்த்துறையின் முதல் பேராசிரியராகவும் விளங்கிய அமரர் கைலாசபதி அவர்களின் ஆய்வுப் பரப்பில் ஒன்று சங்க இலக்கியம். இதில் ஆழமான பரிச்சயம் கொண்ட அவர் சுவை நிரம்பிய கற்பித்தல் முறையால் மாணவர்களைக் கவர்ந்தவர் என்றார்.

இரண்டாவது அமர்விற்குத் தலைமை வகித்த யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசும் போது கூறியதாவது;

அனைத்திந்திய வரலாற்றில் ஒருங்கிணைந்த பகுதியாக சமஸ்கிருதத்திற்கு தொடர்ச்சியாக இல்லாத சிறப்பு தமிழுக்கு இருக்கக் காரணம் சங்க இலக்கியங்களே.

இந்திய உபகண்டத்தின் வரலாற்றில் தமிழ் நாட்டை விட்டுவிட முடியாத அளவிற்கு வட இந்தியச் சான்றுகளை மட்டுமன்றி தென்னிந்தியச் சான்றுகளையும் நோக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தத் தளமாக அமைந்தது சங்க இலக்கியம் தான். இதனை உலகப் பொதுவான வீரயுக இலக்கியம் என்ற கட்டுக்கோப்புக்குள் எடுத்துக் கொள்ளச் செய்தார் அமரர் கைலாசபதி. வீரயுகம் என்ற இந்த இலக்கியம் குறித்து நாம் சிந்தித்தால் மேலும் பல புதிய விடயங்களை அறிய முடியும் என்றார்.

வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், முதுநிலை விரிவுரையாளர் செ. கிருஷ்ணராஜா, துணை விரிவுரையாளர்கள்: க. இரகுபரன், கி. விசாகரூபன், செல்வி செ. சிவசுப்பிரமணியம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், ச சொக்கலிங்கம், பண்டிதர் சச்சிதானந்தன் ஆகியோரும் பேசினர்கள். (த-111)

ஐ தொ கா.-
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
க்கமாட்டேன்—என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தடவைகள் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாம்கலந்து கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார். (அ-ஒ 6)

தென்மராட்சியில்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லும் சாதாரண காய்ச்சலால் சுமார் ஐயாயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டதாகவும் உத்தேசமாகச் சொல்லப்படுகிறது.

இதேவேளை மலேரியா காய்ச்சலுக்கு இப்பகுதி வாழ் மக்களில் பலர் உடனடியாக உரிய சிகிச்சை பெறுவதில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. வரணி, இயற்றாளையைச் சேர்ந்த 65 வயதான சின்னப்பு பாறுப்பிள்ளை என்ற பெண் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 2 மணி நேரத்தில மரணமானார். மலேரியாக் காய்ச்சல் நோய் கண்டு ஒரு வாரத்துக்கு மேலாகியும் அவர் கை வைத்தியம் செய்து, கடுமையான பின்னரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியைப் போலவே வடமராட்சிப் பகுதியிலும் மலேரியா நோய் பரவி வருவதாகத் தெரிய வருகிறது. (அ-117)

ஐரோப்பிய..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நிமை சந்தித்தனர்.

ஐரோப்பிய சங்கத்தின் தூதரகம் ஒன்று இலங்கையில் திறந்து வைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் விரும்புவதாக அமைச்சர் தூது[illegible] (ஒ எ)

இந்தியப்படை ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இவர்கள் அனைவரும் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இப்படிக் காணாமற்போன சம்பவத்தை மூடிமறைப்பதற்கு இந்திய படையினர் முயற்சி எடுத்தனர் என்பது தெரியவந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (ஒ-எ)

வட அயர்லாந்தின்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வாக இந்தப் பிரகடனம் உருவாகியுள்ளது.

வட அயர்லாந்து மக்கள் தமது எதிர்காலத்தை தாங்களே விரும்பும் வண்ணம் அமைத்துக் கொள்ள அவர்களுக்குள்ள உரிமையை இந்தப் பிரகடனம் சோடிட்டுக் காட்டுகிறது.

இப்புதிய நிலைமையை அடுத்து ஐரிஷ் விடுதலை இராணுவம்வன்முறையைகைவிட்டு 3 மாதங்கள் கழித்த பின்னர் அரசுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று பி. பி. ஸி. தெரிவித்தது (ஒ-3)

## வெள்ளவத்தை நுளம்பு பெருகியும் .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லேயே கொழும்பில் கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஆனால் கொழும்பில் வெற்றுக் கொள்கலன்களை வாங்குவதற்கு உரிய பணம் 1 லட்சத்து 16 ஆயிரம் ரூபா நவம்பர் மாதம் ஐந்தாம் திகதியே கொள்வனவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது

வெற்றுக்கலன்களை கொள்வனவு செய்யும் பணத்தை இங்கிருந்து கொழும்[illegible] வதில் போக்குவரத்து வசதிகளில் ஏற்படும் தாமதமே இதற்கான காரணம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

காரணம் என்னவோ, தேவையான காலத்தில்— நுளம்பு பெருகும் மழை காலத்தில் — மலத்தியோன் இங்கு வந்து சேரவில்லை.

மலேரியா தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இப்போதுதான் அவசர அவசரமாக கொழும்பு விரைந்துள்ளாராம்! மலத்தியோன் கொள்வனவு விடயமாக!!

வெள்ளம் வந்த பின் அணை கட்டும் முயற்சியா இது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியங்காட்டில் திருடர் கைவரிசை:

# ரூ. 3 லட்சம் பணத்துடன் வீட்டு மேசை மறைந்தது!

கல்வியங்காடு, டிச, 16
சுமார் 3 லட்சம் ரூபா பணம் இருந்த மேசையை வீட்டிற்கு வெளியே தூக்கிச் சென்று, பணத்தை எடுத்துக் கொண்டு மேசையை ஒழுங்கையில் கைவிட்டுச் சென்றனர் திருடர்கள்!

நேற்று முன்தினம் இரவு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டுக்காரர் மேசை 'லாச்சி'க்குள் சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பணத்தை வைத்துவிட்டு நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம், திருட்டு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

திருடர்கள் வீட்டில் இருந்து 'டெக்' ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

அநாதரவாக ஒழுங்கையில் கைவிடப்பட்டிருந்த மேசை அடுத்த நாள் (நேற்றுக்) காலை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-77)

திருமலை நகரத்தில்

# கைதாகும் தமிழ் இளைஞர் ராணுவத்திடம் ஒப்படைப்பு

திருகோணமலை நகரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து இராணுவ உடை தரித்த தேசத்துரோகிகள் தமிழர் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வெள்ளை நிற வான் ஒன்றில் உலவி வருவதுடன் காணுமிடங்களில் எதிர்ப்படும் இளைஞர்களை கைது செய்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் ஒப்படைத்து வருகின்றனர் என்றும் சில வேளைகளில் இளம் பெண்களும் இவர்களால் கைது செய்யப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்படுபவர்கள் விடுவிக்கப்படுவதானால், தமக்கு பணம் தர வேண்டும் என தேசவிரோதிகளால் வற்புறுத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேசத்துரோகிகள் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையிடும் நடவடிக்கைகளிலும், வழிப்பறி நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## சங்கீத, நடன ஆசிரியர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், டிச 16
தமிழீழ பொதுக்கல்வி தேர்வின் சங்கீதம், நடனம் செயன்முறைத் தேர்வை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் நாளை காலை 10 மணிக்கு கோட்டரீதியாக நடைபெறவிருக்கின்றன.

நடன ஆசிரியர்களுக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நாளை காலை 10 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறும்.

சங்கீத ஆசிரியர்களுக்கு நாளை காலை 10 மணிக்கு — வேலணை, யாழ்ப்பாணம் கோட்டங்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் —

தென்மராட்சிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் —

வடமராட்சிக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும் —

மருதனார்மடத்துக்கு இராமநாதன் கல்லூரியிலும் —

பண்டத்தரிப்புக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் — கலந்துரையாடல்கள் நடைபெறும். (ஒ-3)

## மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், டிச 16
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் காடு வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 25 - 11 - 1993 ஆம் திகதி ஆனைக்கோட்டைப் பிரதேசத்தில் காக்கைதீவுப் பகுதியில் வசிக்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளில் நாட்டுவதற்கென வேம்பு, புளி, நாவல் போன்ற மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் நாட்டப்படும். மரக்கன்றுகளுக்கு பாதுகாப்பும் கூடுகள் அமைப்பதற்கு பனை மட்டைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. (க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசரத்தினம் நாகம்மா

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல. 116 அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி இராசரத்தினம் நாகம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், பார்வதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, காரைநகர் அ.மி.த.க. பாடசாலை) சகோதரியும், பாலசுப்பிரமணியத்தின் மைத்துனியும், தெய்வமாலினியின் பெரியதாயாரும், சுந்தரலிங்கம் (ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை - தற்போது சென். ஜோன்ஸ் அக்கடமி) மாமியாரும், ஷர்மிளா, யசோதரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-12-1993) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம்,

தகவல்:
சுந்தரலிங்கம்
(மருமகன்)

116, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்

(28457)

## சுப்பிரமணியம் இராமநாதன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் காலமானார்.

அன்னார் தேவாம்பிகையின் அன்புக் கணவரும், கோடீஸ்வரி, புவனேஸ்வரன் (கட்டடவரையிபலாளர் சிங்கப்பூர்), செந்தில்குமரன் (ஆசிரியர் - யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), குமாரசிவம் (உதவிக் கணக்காளர், கொழும்பு), மாஸ்கரன் (கட்டடப்பொறியியலாளர், கனடா) ஆகியோரின் தந்தையாரும், சபாநாயகம் (ஆசிரியர்), சாந்தி, மங்களேஸ்வரி, கிருஷ்ணவேணி ஆகியோரின் மாமனாரும், பாலமுரளி, பவானி, றஜனி, தயானி, மோகனமுரளி, பிரணவன், சந்தோஷி, சுபாங்கி, அபர்ணாங்கி, சஞ்சீவன், சாலினி, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (16-12-93) தாவடி மயானத்தில் நண்பகல் 1-00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. செந்தில்குமரன்

இணுவில் தெற்கு,
இணுவில்.

(28458)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.